# தமிழ்நாடு மாநில தேர்தல் ஆணையம்

எண். 208/2, ஜவஹர்லால் நேரு சாலை, அரும்பாக்கம், சென்னை 600 106

## செய்தி தகவல்

செய்தி தகவல் எண்.15/2016 நாள் 20.09.2016

**வாக்காளர் பட்டியல் தயாரிப்புப் பணி**

**உள்ளாட்சி தேர்தலுக்கான பிரதான வாக்காளர் பட்டியல் (Main Electoral Roll)**

தமிழ்நாட்டில் உள்ள அனைத்து சட்டமன்ற தொகுதிகளிலும் 29.04.2016-ல் வெளியிடப்பட்ட வாக்காளர் பட்டியலை அடிப்படையாகக் கொண்டு உள்ளாட்சி வாக்காளர் பட்டியல்கள் வார்டு, தெரு விபரங்களுடன் தயார் செய்யப்பட்டு 19.09.2016-க்குள் வாக்காளர் பட்டியல்களை வெளியிட அனைத்து மாவட்டத் தேர்தல் அலுவலர்களுக்கும் தமிழ்நாடு மாநில தேர்தல் ஆணையம் ஏற்கனவே அறிவுரைகள் வழங்கியிருந்ததனடிப்படையில் பிரதான வாக்காளர் பட்டியல் (Main Electoral Roll) அனைத்து உள்ளாட்சி அமைப்புகளுக்கும் வெளியிடப்பட்டுள்ளது.

**உள்ளாட்சி தேர்தலுக்கான திருத்தப் பட்டியல் (Supplementary Electoral Roll)**

மேலும், 01.09.2016-ல் இந்திய தேர்தல் ஆணையத்தால் வரைவு வாக்காளர் பட்டியல் வெளியிடப்பட்டுள்ளது. இதன் அடிப்படையில் உள்ளாட்சி அமைப்புகளுக்கான திருத்தப் பட்டியல் (Supplementary Electoral Roll) 26.09.2016-க்குள் தயார் செய்ய அனைத்து மாவட்டத் தேர்தல் அலுவலர்களும் தற்போது அறிவுறுத்தப்பட்டுள்ளனர். தொடர்ந்து பெறப்படும் வாக்காளர் பட்டியல் மாற்றங்களை வேட்பு மனு தாக்கல் செய்யவுள்ள கடைசி நாள் வரையில் சேர்த்து வெளியிடவும் அறிவுரைகள் மாவட்ட தேர்தல் அலுவலர்களுக்கு வழங்கப்பட்டுள்ளன.

**வாக்குச்சாவடிச் சீட்டுகள் (Booth slips)**

அதனைத் தொடர்ந்து உள்ளாட்சித் தேர்தல்கள், 2016-க்கான வாக்குச்சாவடிச்சீட்டுகள் அச்சிடும் பணியினை 27.09.2016-ல் துவக்கி 01.10.2016-க்குள் முடிக்கவும் மாவட்ட தேர்தல் அலுவலர்களுக்கு தெரிவிக்கப்பட்டுள்ளது.

இத்தகவல் தமிழ்நாடு மாநில தேர்தல் ஆணையத்தால் தெரிவிக்கப்படுகிறது.

20/09/16

மக்கள் தொடர்பு அலுவலர்